OPEN ACCESS

Volume: 5

Issue: 2

Month: October

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 20.07.2020

Accepted: 09.09.2020

Published: 01.10.2020

Citation:
Kasthuri, C. (2020). Word Classification Based on Gender and Class. *Shanlax International Journal of Tamil Research, 5*(2), 12–18.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i2.3486

*Corresponding Author:
c.kasthuri.phd@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Word Classification Based on Gender and Class

**Dr. C. Kasthuri**
*Head and Associate Professor, Department of Tamil*
*Kamaraj College, Thoothukudi, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0001-9159-7006

**Abstract -** This article is based on the Kilaviyakkam of Tolkappiam. All the objects of the world are classified into two as superior and inferior. The rational people, God and Hell, are subdivided into supernatural and irrational living and inanimate into sublime. There is no definition in nouns of what sex it means. But in the verbs the definition of what is meant by sex is clear.

**Keywords:** Tolkappiyam, Gender, Word Discrimination, Kilaviyakkam, Tamil Grammer, Supernatural, God and Hell.

**References**

1. Suyambu, P., Ilakkananoolkalanjiyam, R.R. Nilayam, Chennai.
2. Andiappan, T., Kaapiyarneri, Muthupadhippagam, Madurai.
3. Sakthivel, S., Tamilmozhivaralaru, Manivasagar Padhippagam, Chennai.
4. Parandhamanar, A.K., Nalla Tamil Pesavenduma?, Paarinilayam, Chennai.
5. Paramasivam, S., Nartamil Ilakkanam, Pattupathippagam, Chennai.

# திணை பால் அடிப்படையில் சொற் பாகுபாடு

***முனைவர் செ. கஸ்தூரி***
இணைப்பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர்
காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி

***ஆய்வுச் சுருக்கம்:*** *தொல்காப்பியத்தின் கிளவியாக்கத்தை அடிப்படையாகக்கொண்டு இக்கட்டுரை அமைந்துள்ளது. உலகத்துப் பொருள்கள் எல்லாம் உயர்திணை அஃறிணை என இருவகைப்படுத்தப்பட்டுள்ளன. பகுத்தறிவுடைய மக்கள் தேவர் நரகர் ஆகிய மூவரும் உயர்திணையாகவும் பகுத்தறிவில்லா உயிருள்ளவையும் உயிரில்லாதவையும் அஃறிணையாகவும் பகுக்கக்ப்பட்டுள்ளன. பெயர்ச்சொற்களில் இன்னவிகுதி இன்ன பாலைத் தான் உணர்த்தும் என்ற வரையறை இல்லை. ஆனால் வினைச்சொற்களில் இன்னவிகுதி இன்னபாலை உணர்த்தும் என்ற வரையறை தெளிவாக உள்ளது.*

***முக்கியச் சொற்கள்:*** *தொல்காப்பியம், தமிழ் இலக்கணம், திணை, பால், செம்மொழி, வினைச்சொல், சொற் பாகுபாடு*

செம்மொழியாம் தமிழ்மொழியை அமைப்பு நிலையில் தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூவகையாகவும் இலக்கிய நிலையில் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு வகையாகவும் இலக்கண நிலையில் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகையாகவும் தமிழ் இலக்கண நூலார் வகைப்படுத்தியுள்ளனர் இப்பகுதி பெயர்ச்சொல்லானது திணை, பால் அடிப்படையில் எங்ஙனம் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது என்பதை விளக்கும் வகையில் அமைகின்றது.

## திணை அடிப்படையில் சொற்பாகுபாடு

திணை என்பது பலபொருள் ஒரு சொல்லாய் பகுப்பு, ஒழுக்கம், வகுப்பு, குலம், இனம், குடி, பிரிவு எனப் பல பொருள்களைக் கொடுக்கும். சான்றோர் உலகத்துப் பொருள்களை எல்லாம் இனம் கருதி உயர்திணை என்றும் அஃறிணை என்றும் இரண்டு திணைகளாகப் பிரித்து வைத்துள்ளனர். எனவே திணை அடிப்படையில் சொல் உயர்திணைச்சொல் எனவும் அஃறிணைச் சொல் எனவும் இரண்டுவகைப் படுத்தப்பட்டுள்ளது.

### உயர்

மக்களின் பகுத்தறிவு மேம்பாட்டையும் நாகரிக வளர்ச்சியையும் கருதி, இயங்கவல்ல நிமிர்ந்து நேராய் நிற்கக்கூடிய மக்களை உயர்திணை என்றனர். மக்களைக் குறுக்கில் வளரும் உயிரினங்களிலிருந்து பிரித்து அவர்களது நடைமுறைகள் ஒழுங்காக, ஒழுக்கமாக அமைய வேண்டும் என்று முன்னோர்கள் எண்ணிய எண்ணம் நினைத்து இன்புறத்தக்கதாகும்.

தொல்காப்பியம் (சொ: 1) இலக்கண விளக்கம் (162) தமிழ்நூல் (49) ஆகிய இலக்கண நூல்கள் மக்களை மட்டுமே உயர்திணையாகக் கூறியுள்ளன. இளம்பூரணாரும் நச்சினாாக்கினியரும் தேவர்களையும் உயர்திணையுள் அடக்கினர். பிற்காலத்தில் தோன்றிய நன்னூலும் (261) முத்துவீரியமும்

(467) தொன்னூல் விளக்கமும் (50) மக்கள், தேவர், நரகர் ஆகிய மூவரையும் உயர்திணைப் பொருள்களாகக் கூறுகின்றன. எனினும் மக்கள் என்பதே உயர்திணைக்கு முதன்மையானதும் மூலமானதுமான எடுத்துக்காட்டாகும். தேவர், நரகர் என்பதெல்லாம் சமயக்கொள்கைகளின் வழிவந்து இணைந்தவையாகும்.

குழந்தைகளையும் கடவுளையும் உயர்திணையாகவும் அஃறிணையாகவும் கூறுவது தமிழ்மரபு. மக்கள் போன்று அறிவுடைப்பொருளாக நூல்களில் உயர்த்திக் கூறப்படுவோர் (முருகன் அருளுவன், நரிமாமா வந்தார்) பெயராலும் வினையாலும் உயர்திணையாகக் கருதப்படுவர்.

### அஃறிணை

அனைத்து இலக்கண நூல்களும் மக்களைத் தவிர்த்த உயர்ந்த குலமும் சிறந்த ஒழுக்கமும் பகுத்தறிவும் இல்லாத உயிர் உள்ளவையானாலும் இல்லாதவையானாலும் அனைத்தையும் அஃறிணை என்ற பிரிவில் அடக்குகின்றன. உயர்திணைப்பகுப்பினுள் வரையறை செய்யப்பட்டவை உயிர் நீப்பின் அவை அஃறிணையாகச் சுட்டப்பெறும். ஆறாம் அறிவு துலங்காமையால் குழந்தை அஃறிணையாகக் கருதப்படுகிறது. வயதானவர் எதற்கும் பயனின்றி உண்டு, உறங்கி பொழுது கழிப்பின் அஃறிணைக்கு இணையாக, அது வரும் சாப்பிடும் போகும் எனப்படுகின்றார். மதிப்புறு விகுதியை அஃறிணைப் பொருளுக்கும் சேர்த்துக் கூறும் வழக்குக் காணப்படுகிறது (நாலடியார், திருக்கோவையார்).

### பால் அடிப்படையில் சொற்பாகுபாடு

இருதிணைகளிலும் அடங்கிய உலகத்துப் பொருள்களை ஐம்பால்களாகப் பிரிக்கின்றனர். பால் என்பது பகுப்பு, இயல்பு, தன்மை, பிரிவு எனப்படும். எனவே சொல், பால் அடிப்படையில் ஐந்து வகைப்படும். உயர்திணைப் பொருள் பற்றி வரும் சொற்கள் மூவகையாகவும் அஃறிணைப் பொருள் பற்றி வரும் சொற்கள் இருவகையாகவும் பகுக்கப்பட்டுள்ளன.

### உயர்திணைப் பால்கள்

ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய மூன்றும் உயர்திணைக்கு உரியனவாகும். மக்களுள் ஆண்களைக் குறிக்கும் பெயர்களை எல்லாம் ஆண்பால் என்பர். பெண்களைக் குறிக்கும் பெயர்களை எல்லாம்பெண்பால் என்பர் (ஒருவனையோ, ஒருத்தியையோ மட்டும் குறிக்க வேண்டும்). இருவர், இருவர்க்கு மேற்பட்டவர்களைக் குறிக்குமானால் அப்பெயர்களைப் பலர்பால் எனவும் உயர்திணைப் பால்கள் மூவகைப்படுத்தப்பட்டுள்ளன.

சில சமயங்களில் சிறப்புக் கருதி தனி ஆளையே மரியாதையுடன் குறிப்பிடப் பலர்பாலைப் பயன்படுத்துகின்றனர். (கணவர், தகப்பனார்) இதனைத் தொல்காப்பியம் (சொ : 7) உயர்சொற் கிளவி எனவும் மொழி நூல்கள் உயர்வு ஒருமைப்பெயர் எனவும் சுட்டுகின்றன. இதை மரியாதைப் பன்மை எனவும் கூறுகின்றனர்.

### அஃறிணைப்பால்கள்

அஃறிணையில் ஒரு பொருளை மட்டும் குறித்தால் ஒன்றன்பால் எனவும் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறித்தால் பலவின்பால் எனவும் அஃறிணைப் பால்களை இரண்டு வகையாகச் சுட்டுகின்றனர்.

ஆண்பால், பெண்பால் என்னும் வழக்கு உயர்திணைக்கு மட்டுமேயன்றி அஃறிணைக்கு இல்லை என்பர். ஆயினும் அஃறிணையிலும் பால் வேறுபாடு உள்ளது. களிறு, சேவல், கடுவன் முதலியன ஆண்பாலையும் பிடி, பேடை, மந்தி முதலியன சொற்களால் பெண்பாலையும் தெரிவித்தபோதிலும் உயிர்ப் பொருள்களுள் இவ்வேறுபாடு சிறுபான்மையாகவே தெரிய வருகின்றன. இலக்கண முறையில்

இவற்றை ஆண்பால், பெண்பால் எனக் கூறாமல் ஒன்றன்பால் என்னும் பகுப்பிலேயே அடக்குகின்றனர்.

### திணை, பாலுள் அடங்காத சொற்கள்

தொல்காப்பியம் (சொ: 4) இலக்கண விளக்கம் (165) திணையுள் அடங்காத தெய்வத்தையும் பாலுள் அடங்காத பேடியையும் குறிப்பிடுகின்றன. நன்னூல் (264) பேடியையும் அலியையும் கூறுகிறது. திணையில் அடங்காத தெய்வத்துக்கும் பாலுள் அடங்காத ஆண்மை திரிந்த உயர்திணையும் பெண்மை திரிந்த உயர்திணையும் இன்னபால் எனத் தம் பொருளை வேறுபடுத்திக் காட்டும் விகுதிகளைப் பெற்றிருப்பதில்லை. ஆனாலும் இவை உயர்திணைக்குரிய பாலாய் வேறுபட்டு இசைக்கும்.

**அலி வந்தான், பேடி வந்தாள், பேடியர் வந்தார்.**
**தேவன் வந்தான், தேவி வந்தாள், தேவியர் வந்தார்.**

தற்பொழுது பாலுள் அடங்காத அலி (ஆண்), பேடி (பெண்) ஆகியோருக்கு மக்களுள் ஆண், பெண் பாலுக்குரிய மதிப்பும் மரியாதையும் நல்குவது போல் திருநம்பி, திருநங்கை எனத் தனி இடம் வழங்கி ஆண், பெண் பால்களுக்கு இணையாகக் கருதும் போக்கு உருவாகியுள்ளது.

### வழுவமைதி

மரியாதையினாலோ, உயர்வினாலோ ஒரு திணை பாலுக்கு, வேறு திணை, பால் சொல் வருமானால் அதைத் தவறு என்று கருதாது ஒப்புக்கொள்வது வழுவமைதி என்பர். திணை அறிந்து பால் அறியாத ஐயப்பொருளை அத்திணைக்குரிய பன்மைச் சொல்லாலும் உருபு, உரு என்னும் பொதுச் சொல்லாலும் கூற வேண்டும் (இளம்பூரணர் உருபு எனவும் சேனாவரையர் உரு எனவும் கூறுகின்றனர்). அஃறிணையில் இருபாலுக்கும் பொதுவான பெயர்ச்சொல் கொண்டு முடிக்க வேண்டும்.

### பால் விகுதிகள்

பொதுவாகப் பெயர்கள் இன்ன எழுத்தில் முடிந்தால் அஃது இன்ன பாலைக் குறிக்கும் என்று நுண்மையாகக் கூறியுள்ளனர். இவ்வெழுத்தினைக் கொண்ட ஈறுகளைக் கொண்டே இவற்றிற்குத் திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் கூறிவிடலாம். இதனைத் தொல்காப்பியம் (சொ: 7) பாலறி சொல் என்றும் நன்னூல் (140) விகுதி என்றும் கூறுகின்றது.

பெரும்பாலும் பெயர்கள் விகுதிகள் கொண்டே முடியும். சிறுபான்மை விகுதிகள் இல்லாமலும் இருக்கும் (பாரதி, ராதா, காமாட்சி). இவ்வாறு பெயர்கள் விகுதி இல்லாமல் வந்தால் வினையிலுள்ள விகுதியானது பெயருக்குத் துணை நிற்கும். எனவே பெயரில் மறைந்து நிற்பினும் வினையில் விகுதிகள் வருவது சிறப்பானது.

### வினை விகுதிகள்

வினைச்சொற்களில் இன்ன விகுதி இன்ன பாலை உணர்த்தும் என்ற வரையறை தெளிவாக உள்ளது. தொல்காப்பியம் (சொ: 5-10) 11 வினை விகுதிகள் வினைச் சொற்களின் இறுதியில் பால் உணர்த்த வேண்டித் தவறாது தோன்றும் எனக் கூறுகிறது (ன்,ள்,ர்,ப,மார்,து,று,டு,அ,ஆ,வ). வினையிலும் படர்க்கை வினை மட்டுமே திணை, பால் உணர்த்தும்.

நன்னூலும் (325 - 329) இலக்கண விளக்கமும் (231, 234) அன், ஆன் விகுதிகள் ஆண் பாலையும் அள், ஆள் விகுதிகள் பெண்பாலையும் அர், ஆர், ப, மார் என்பன பலர்பாலையும் து, று, டு ஆகியன ஒன்றன் பாலையும் அ, ஆ விகுதிகள் பலவின் பாலையும் உணர்த்துவதாக 13 விகுதிகளை எடுத்துரைக்கின்றன. ஆ என்னும் விகுதி இறந்த காலத்தில் எதிர்மறைப்பொருளில் மட்டுமே இடம்பெறும்.

நன்னூல், இலக்கண விளக்கம் ஆகிய நூல்கள் கூறிய 13 விகுதிகளுடன் முத்து வீரியம் (604, 605, 612, 613) பலவின்பால் விகுதியாக வகரத்தையும் இணைத்து 14 விகுதிகளைச் சுட்டுகிறது.

## பெயர் விகுதிகள்

பெயர்ச் சொற்களைத் திணை அடிப்படையில் தொல்காப்பியம் (சொ: 160) உயர்திணைப் பெயர்கள், அஃறிணைப் பெயர்கள், விரவுப் பெயர்கள் என மூவகைப்படுத்துகிறது. தொல்காப்பியம் விரவுப்பெயர் எனக் கூறுவதை நன்னூல் (282) முத்துவீரியம் (485) இலக்கண விளக்கம் (183) ஆகிய நூல்கள் பொதுப்பெயர் எனக் கூறுகின்றன.

பெயர்ச் சொற்களில் இன்ன விகுதி இன்ன பாலைத்தான் உணர்த்தும் என்ற வரையறை இல்லை. விகுதி அடிப்படையில் பெயரைப் பாகுபாடு செய்ய இயலாது. எனினும் பொருள் நோக்கியும் வழக்கு நோக்கியும் பால்பாகுபாடு செய்து கொள்ளலாம். பெயர்ச் சொற்களைத் திணை அடிப்படையில் பாகுபாடு செய்து கூறும்பொழுது அச்சொற்கள் முழுச்சொற்களாகவே இலக்கண நூல்கள் கூறுகின்றன.

தொல்காப்பியம் (சொ: 162, 163) உயர்திணைப் பெயர்கள் இவை அஃறிணைப் பெயர்கள் இவை என்று கூறுகிறாரேயன்றி இன்னஇன்ன பாலுக்குரியன என்று உணர்த்தவில்லை. இருப்பினும் இவை இவை இன்னஇன்ன என்று உணர்ந்து கொள்ள முடிகின்றது. ஆனால் நன்னூல் (276 - 280), முத்துவீரியம் (477 - 484), இலக்கண விளக்கம் (177 - 182) ஆகிய நூல்கள் ஐம்பால் அடிப்படையில் பகுத்துரைக்கின்றன.

## உயர்திணைப் பெயர்கள்

தொல்காப்பியம் (சொ : 162) உயர்திணைப் பெயர்களாக 44 பெயர்களைக் குறிப்பிடுகின்றது. உயர்திணைப் பெயர்களுள் சுட்டுப்பெயர், வினாப்பெயர், தன்மைப்பெயர் ஆகிய மூவகைப் பெயர்களும் இயற்பெயருக்குப் பதிலாக வழங்கும் மாற்றுப்பெயர் பதிலிடு பெயர்களாக அமைகின்றன. பதிலிடு பெயர்கள் இயற்பெயருக்குப் பின்னால் வர வேண்டும். சிறப்புப் பெயர்கள் இயற்பெயருக்கு முன்னால் வர வேண்டும்.

நன்னூல் (276 - 278) இலக்கணவிளக்கம் (177 - 179) முத்துவீரியம் (477 - 481) ஆகியன உயர்திணைப் பெயர்களின் அடிப்படையில் சுட்டு, வினா, பிற, மற்று ஆகிய நான்கின் அடிப்படையில் இடம்பெறும் எனக் கூறுகின்றன. னகர ஈற்றுப்பெயர்கள் ஆண்பாலையும் ளகர, இகர ஈற்றுப்பெயர்கள் பெண்பாலையும் ர், மார், கள் என்பன பலர்பாலையும் உணர்த்துவதாகச் சுட்டுகின்றன.

நண்பன், புலவன் என்னும் ஆண்பாற் பெயர்களுக்கு இணையான பெண்பாற் பெயர்கள் இல்லை. எனினும் புலவன் என்பதற்கு இணையாகப் பெண்பாற் புலவர் என்று சொல்லாம். ஆனால் புலவி,நண்பி எனக் கூறுவது தவறானதாகும். “கொடும்பசி நீக்கும் மருத்துவி” என்ற சொல்லானது மணிமேகலையில் காணப்படுகிறது.

நோயாளி, நொண்டி, தொழிலாளி என்னும் சொற்கள் ஆண்பால், பெண்பால் இரண்டிற்கும் பொதுவானவையாகும். ஒருவர் என்னும் சொல் ஆண், பெண் இரண்டிற்கும் பொதுவானது. ஒருமைப் பொருளைக் கொடுத்தாலும் பலர் பால் வினைமுற்றைக் கொண்டே முடிவு பெறும் (ஒருவர் வந்தார்).

ஒருவரைக் கூறும் பன்மைச் சொல்லில் “ஆர்” விகுதி பன்மை காட்டாதபோது “மார்” விகுதி பன்மை காட்டும். தாயார் -

தாய்மார். எனினும் பிள்ளையார் என்னும் பெயர் "மார்" விகுதி பெறுவதில்லை (பிள்ளைமார் - சாதிப் பெயர்).

தொல்காப்பிய காலத்தில் அஃறிணை இயற்பெயர் "கள்" விகுதி சேர்ந்து பன்மை பொருளை உணர்த்துகின்றன. ஆனால் நன்னூல் உயர்திணைப் பாலானது "கள்" விகுதி பெற்று வரும் என எடுத்துரைக்கின்றது. நாம், அவர், இவை பன்மையைக் குறிக்கும். "கள்" விகுதி சேர்க்க வேண்டியதில்லை ஆனாலும் சேர்க்கின்றோம் (நாங்கள், அவர்கள், இவைகள்) இவ்வாறு சேர்ப்பதனை விகுதி மேல் விகுதி என்பர். தற்பொழுது ஒருமையிலும் ரகர ஒற்றும் "கள்" விகுதியும் பயன்படுத்தப்படுகின்றன (கண்ணன் அவர்கள் வருவதாகக் கூறினார்கள்). இவ்வாறு கூறுவதனை மரியாதை உயர்வுப் பன்மை என அழைக்கின்றனர்.

### அஃறிணைப் பெயர்கள்

தொல்காப்பியம் (சொ: 167, 168) அஃறிணைப் பெயர்களாக 14 பெயர்களைக் குறிப்பிடுகின்றது. நன்னூல் (279, 280) இலக்கண விளக்கம் (180, 181) முத்துவீரியம் (482, 484) ஆகியன அஃறிணை ஒன்றன்பாற் பெயர்கள், அஃறிணைப் பலவின்பாற் பெயர்கள் எனத் தனித்தனியே பகுத்துக் கூறுகின்றன.

அஃறிணை இயற்பெயர்கள் "கள்" என்னும் விகுதியோடு பொருந்தி வரும் (மரம் - மரங்கள்). "கள்" விகுதி இல்லாமலும் பன்மை உணர்த்தலாம். அவ்வாறு உணர்த்தும்போது வினைச்சொல்லோ அல்லது எண்ணுப்பெயரோ பன்மையை உணர்த்தும் (யானை வந்தது - யானை வந்தன, ஒரு மாடு - பத்து மாடு).

செய்யுளில் இருதிணைக்கும் உரிய பெயர்கள் எண்ணுமுறையில் வந்தால் அஃறிணை முடிவு பெறும் (மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா).

### விரவுப்பெயர்கள்

உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாய் அமையும் பெயர்கள் விரவுப்பெயர்கள் என்பர். தொல்காப்பியமும் (சொ: 174 - 187), முத்துவீரியமும் (485 - 501) 19 பெயர்களை விரவுப்பெயர்களாகக் கூறுகின்றன. நன்னூலும் (282 - 284), இலக்கண விளக்கமும் (183 - 187) 26 பெயர்களைப் பொதுப்பெயர்களாக எடுத்துரைக்கின்றன. விரவுப்பெயர்கள் உயர்திணைப் பொருளைக் குறித்து வரும்போது உயர்திணையாகவும் அஃறிணைப் பொருளைக் குறித்து வரும் போது அஃறிணையாகவும் கருதப்படும். உயர்திணையா அஃறிணையா என்பதைத் தொடர்ந்து வரும் வினையால் அறிந்து கொள்ளலாம். வினைகளைக் கொண்டே திணை, பால் வேறுபாடு அறியமுடியும்.

சாத்தன், தந்தை போன்ற பெயர்கள் உயர்திணை, அஃறிணை ஆண்பால்களுக்கும் சாத்தி, தாய் போன்ற பெயர்கள் உயர்திணை, அஃறிணைப் பெண்பால்களுக்கும் வந்து திணைப் பொதுப் பெயராக அமைகின்றன (சாத்தன் இவன் - சாத்தன் இக்காளை, தாய் இவள் - தாய் இப்பசு)

இக்காலத்தில் வீட்டில் வளர்க்கும் உயிரினங்களுக்கும் தொடர்வண்டி, பேருந்து போன்ற பொருள்களுக்கும் மக்கள் பெயர்கள் இட்டு அழைக்கின்றோம். இவ்வாறு அழைக்கும் பெயர்கள் எல்லாம் விரவுப்பெயர்களாகும் (சேரன் வரும், பாண்டியன் வந்ததா?).

### பேச்சு மொழி

இன்றைய பேச்சு மொழியில் ஒருவர் பயன்படுத்துகின்ற சொல் அல்லது மொழி வடிவங்களைக் கொண்டே பேசுபவருக்கும் மற்றவர்க்கும் இடையேயுள்ள நெருக்கம், தொடர்பு, கல்வி, பொருளாதாரம் முதலியவற்றை அறிந்துகொள்ள முடிகின்றது. வயது குறைந்தவர்கள் வயது முதிர்ந்தவர்களைப் பார்த்துப் பெருசு,

கிழடு என அழைக்கின்றனர். வயதில் குறைந்து அதே சமயம், பொருளாதாரம் அல்லது கல்வியில் உயர்ந்திருக்கும் ஆண், பெண்ணை வயதானவர்கள் கூட வாங்கையா, வாங்கம்மா என அழைக்கின்றனர்.

## தொடர் அமைப்புக்கள்

தொடரமைப்பானது பொருள் பெற்ற நிலையிலும் வழுவற்ற நிலையிலும் அமைதல் வேண்டும். தொடரில் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் திணையும் பாலும் காட்டுகின்றன. எழுவாயாக அமையும் பெயருக்கும் பயனிலையாக அமையும் வினைக்கும் திணை, பால் இயைபு கட்டாயம் இருக்க வேண்டும். இப்பகுதியின் வாயிலாக அறியலாகும் தொடர் அமைப்புக்கள்.

1. எழுவாயில் தோன்றும் விகுதியும் பயனிலையில் தோன்றும் விகுதியும் ஒத்திருத்தல் வேண்டும் (கண்ணன் வந்தான்).
2. எழுவாய் விகுதியின்றி வந்தால் பயனிலையின் விகுதி பெயருக்குத் துணை நிற்கும் (பாரதி வந்தாள்).
3. எழுவாய் ஒருமையாக இருக்கப் பயனிலை பன்மையாகவும் வரலாம் (தந்தை வந்தார்).
4. சுட்டுப்பெயர் இயற்பெயர் பின்னர் வர வேண்டும் (இராமன் இவன்).
5. சிறப்புப்பெயர் இயற்பெயரின் முன்னர் வர வேண்டும்(புலவன் பாரதி).
6. ஒருமைப்பொருளை உயர்த்திக் கூறுமிடத்துப் பன்மைச் சொல்லால் கூற வேண்டும் (நரியார் வந்தார்).
7. ஆர் விகுதி பன்மை காட்டாத இடத்தில் மார் விகுதி பன்மை காட்டும் (தாயார் வந்தார் - தாய்மார் வந்தார்).
8. அஃறிணையில் கள் விகுதி இல்லாமலும் பன்மை உணர்த்தப்படலாம் (யானை வந்தது- யானை வந்தன).
9. உயர்திணை ஒருமைப்பெயர் மரியாதை உயர்வுப்பன்மையாக ஆர் விகுதியும் கள் விகுதியும் பெற்றுவருகின்றன (முதல்வர் அவர்கள் பேசினார்கள்).
10. திணை அறிந்து பால் அறியாத நிலையில் அத்திணைக்குரிய பன்மைச் சொல்லால் கூற வேண்டும் (ஆணோ, பெண்ணோ அங்கே நிற்கின்றவர்

இவ்வாறு இன்னும் பல தொடரமைப்புக்கள் இப்பகுதியில் அமைந்திருக்கின்றன.

## பார்வை நூல்கள்

1. பெ.சுயம்பு, இலக்கண நூற்களஞ்சியம், ஆர்.ஆர். நிலையம், சென்னை.
2. தொல்காப்பியர் நெறி: தே. ஆண்டியப்பன், முத்துப்பதிப்பகம், மதுரை.
3. சு.சக்திவேல், தமிழ் மொழி வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
4. அ.கி. பரந்தாமனார், நல்ல தமிழ் பேச வேண்டுமா? பாரி நிலையம், சென்னை.
5. சொ.பரமசிவம், நற்றமிழ் இலக்கணம், பட்டுப் பதிப்பகம், சென்னை.